காணிப்புப் பொறியாளர் அவர்கள் ரூ. 2,52,810.29 தேவைப்படுகிறது என்று அரசுக்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (அஅ) சென்னை மாநகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகரில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதால், பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) விவரங்களைச் சேகரிக்கிறார்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

சென்னை மாநகரில் வசிக்கும் 55 லட்சம் மக்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கு உள்ள முக்கிய ஆதாரம் பூண்டி, சோழவரம், புழல் ஆகிய மூன்று ஏரிகளாகும். இவற்றின்மொத்தக் கொள்ளளவு 6483 மில்லியன் கன அடி. சென்னை நகரிலுள்ள ஒவ்வொருவருக்கும் தினமும் 70 லிட்டர் என்ற அளவில் ஓராண்டிற்கு குடிநீர் வழங்கத் தேவயான கொள்ளளவு 4500 மில்லியன் கன அடி. இது தவிர தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆழ் துளைக் கிணறுகள் மூலம் சுமார் 14 மில்லியன் காலன் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு அதில் பெரும்பகுதி மணலியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1993 அக்டோபர் 29

2. சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை வழக்கமாக மழை பொழியும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்துப் போனதின் விளைவாக, ஏரிகளில் போதிய அளவு நீர் சேரவில்லை. இவ்வாண்டு ஜனவரி முதல் வாரத்தில் மொத்த நீர் இருப்பு சுமார் 1500 மில்லியன் கன அடி மட்டுமே ஆகும். சென்ற ஆண்டு இதே காலகட்டத்தில் இருந்த மொத்த நீரின் அளவு 6050 மில்லியன் கன அடி ஆகும். மேலும், குறைவான மழையின் விளைவாக, தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்க உபயோகப்படும் ஆழ்துளைக் கிணறுகளிலும் நீர் மட்டம் மிகவும் தாழ்ந்து விட்டது.

3. இந்தச் சூழ்நிலையை உடனடியாக ஆய்வு செய்த அரசு, முதற்கட்டமாக 10—1—1993 முதல் இரு தினங்களுக்கு ஒரு நாள் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கும் முறையை செயலாக்கப்படுத்தியது. மேலும், மக்களுக்கு போதிய அளவு குடிநீர் இல்லாமையால் ஏற்படக்கூடிய இன்னல்களைக் களையும் பொருட்டு, ரூ. 23.22 கோடி அளவில் சென்னைக் குடிநீர் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட முதல் அவசர கால திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் துவக்கப்பட்டன. இதன் இரண்டாம் கட்டமாக, ஆகஸ்ட் மாதம் மேலும் ரூ. 29.50 கோடிக்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மக்களுடைய குடிநீர்த் தேவையை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யும்பொருட்டு, அரசின் மேற்பார்வையில் சென்னை குடி நீர் வாரியத்தால் போர்க்கால அடிப்படையில் செயலாக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 1. வெளியிடங்களில் இருந்து சென்னைக்கு கூடுதல் நீர் கொண்டு வருதல்:

ஏப்ரல் மாதத்திலிருந்து ரயில் மூலம் நெய்வேலி மற்றும் ஈரோட்டிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 15 லட்சம் லிட்டர் தண்ணீர் சென்னைக்கு கொண்டு வரப்படுகிறது.

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களிலும் தினசரி சுமார் 40 லட்சம் லிட்டர் நீர் போரூர் ஏரிக்குக் கொண்டுவரப்பட்டு, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு நீர் வாரியத்துடன் இணைத்து செயல்பட்டு, பாலாற்றிலிருந்து ஆலந்தூர் பகுதிக்கு குடிநீர் வழங்கும் குழாய் மூலம் கூடுதலாக தினமும் சுமார் 10 லட்சம் லிட்டர் ஈக்காட்டுத்

1993 அக்டோபர் 29] [திரு. டி. எம். செல்வகணபதி]

தாங்கலில் பெறப்பட்டு சுற்றியுள்ள பகுதிகளுக்கு லாரிகள், டிராக்டர்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மற்றும் திருநின்றவூர், நாரவாரிக்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து சுமார் 15 லட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு குழாய் மூலம் விநியோகிக்கப்படுகிறது. தவிர, மாங்காடு பகுதியில் உள்ள திறந்தவெளிக் கிணற்றிலிருந்து தினசரி சுமார் 6 லட்சம் லிட்டர் நீர் பெறப்படுகிறது.

நெய்வேலி சுரங்கப் பகுதியிலிருந்து லாரிகள் மூலம் தினசரி சுமார் 55 லட்சம் லிட்டர் நீர் சென்னை நகர மக்கள் தேவைக்காக கொண்டு வரப்படுகிறது.

சென்னை நகரிலிருந்து 70 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பழையசீவரம் என்ற இடத்திலிருந்து லாரிகள் மூலம் தினமும் சுமார் 10 லட்சம் லிட்டர் பாலாற்று நீரும், 95 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஒச்சேரி என்ற இடத்திலிருந்து லாரிகள் மூலம் தினமும் 18 லட்சம் லிட்டர் பாலாற்று நீரும் கொண்டு வரப்பட்டு நகரில் விநியோகிக்கப்படுகிறது. இது தவிர, அம்பத்தூர், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களிலிருந்து லாரிகள் மூலம் தினசரி சுமார் 15 லட்சம் லிட்டர் நீர் கொண்டு வரப்படுகிறது.

சென்னை நகருக்கு தெற்கே அமைந்துள்ள ஒகியம் மதகு ஏரியிலிருந்து முதல் முறையாக தினசரி சுமார் 8 லட்சம் லிட்டர் குடிநீர் அக்கரைக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

மணலியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு சாதாரணமாக தினசரி 450 லட்சம் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வந்தது. ஏப்ரல் மாதத்திலிருந்து இந்த அளவு பாதியாக குறைக்கப்பட்டு, இதனால் மீதமாகும் 225 லட்சம் லிட்டர் குடிநீர் சென்னை நகர குடிநீர் தேவைக்கு உபயோகிக்கப்படுகிறது.

தென் சென்னையில் அக்கரை மற்றும் நீலாங்கரை பகுதிகளில் 7 பெரிய திறந்த வெளிக் கிணறுகள் நிறுவப்பட்டு இவற்றின் மூலம் கூடுதலாக 6 லட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

நகரைச் சுற்றியுள்ள இடங்களில் சென்னைக் குடிநீர் வாரியம் தனியார் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 46 கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி, அவற்றின் மூலம் தினசரி சுமார் 40 லட்சம் லிட்டர் நீர் பெற்று விநியோகிக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. டி. எம். செல்வகணபதி] [1993 அக்டோபர் 29

## 2. சென்னை நகரின் குடிநீர் விநியோகம் :

தற்போது சென்னை நகரில் இரு தினங்களுக்கு ஒரு முறை என்ற அளவில் 610 லட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குழாய்மூலம் வழங்கப்படுகிறது. இது தவிர தினசரி லாரிகள், டிராக்டர்கள் மூலம் 520 லட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நகரிலுள்ள சுமார் 7500 தெருக்களில் வழங்கப்படுகிறது. இதற்காக நகரில் 370 லாரிகளும், 486 டிராக்டர்களும் தினசரி சுமார் 6500 நடை ( trips ) குடிநீர் விநியோக பணி செய்து வருகின்றன.

இவ்வளவு எண்ணிக்கையில் ஓடும் லாரிகள், டிராக்டர்களில் விரைவாக நீர் நிரப்பி, காலதாமதமின்றி மக்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, வள்ளுவர் கோட்டம் ஆகிய முக்கிய நீர் நிரப்பு நிலையங்களிலுள்ள நீர் நிரப்பும் அமைப்புகள் விரிவாக்கப்பட்டு நவீன மயமாக்கப்பட்டுள்ளன. இது தவிர, ஈக்காட்டுத்தாங்கல், கே. கே. நகர், அசோக்நகர், ஆகிய பல பகுதிகளில் புதிதாக நீர் நிரப்பும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை நகரில் ஜனவரி மாதத்தில் இருந்த மொத்த குடிநீர் விநியோகத் தொட்டிகளின் எண்ணிக்கை 1935 ஆகும். இது படிப்படியாக மக்களின் தேவைக்கேற்ப உயர்த்தப்பட்டு, தற்போது நகரின் பல்வேறு பகுதிகளிலும் மொத்தம் 7005 குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. (கூடுதல் தொட்டிகள் 5070)

சட்டமன்ற நூலகம் LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 3. குடிநீர் இல்லாத இதர தேவைகள் :

1992 இல் வடகிழக்குப் பருவமழை போதிய அளவு இல்லாத காரணத்தினால், நகரில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் சென்னை நகர மக்களின் குடிநீர் அல்லாத இதர தேவைகளுக்கான நீரளவை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த ஆண்டு சென்னை குடிநீர் வாரியம் புதிதாக நகரின் அனைத்துப் பகுதிகளிலும் 2664 இந்தியா மார்க் 2 பம்புகளை நிறுவியுள்ளது. ஏற்கனவே இருந்த 4531 பம்புகளையும் சேர்த்து, தற்போது 7195 பம்புகள் உபயோகத்தில் உள்ளன.

மற்றும், கடற்கரை ஓரமாக அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளில் 160 ஆழமில்லாத குழாய்க் கிணறுகள் ( Shallow Tube Well ) புதிதாக அமைக்கப்பட்டு, அங்குள்ள மக்களின் குடிநீர் அல்லாத இதர நீர் தேவையை பூர்த்தி செய்கின்றன.

**4. கண்காணிப்பு :**

முன்பு எப்போதும் கண்டிராத அளவில் இவ்வாண்டு நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை முடிந்த வரையில் போக்கி மக்களின் இடர்பாடுகளை களையும் நோக்கத்துடன், மேற் கூறிய பல்வேறு திட்டங்களை போர்க்கால அடிப்படையில் செயல் படுத்தி வரும் அரசு, இத்திட்டப்பணிகளின் செயற்பாட்டை கண்காணித்து, சீரமைக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்துள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் மக்களின் முறையீடுகளைப் பெற்று உடன் களைய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 'புகார்ப் பிரிவு' இரவு பகலாக, 24 மணி நேரமும் இயங்கி வருகிறது.

நகரில் குடிநீர் விநியோகம் ஒழுங்காக நடைபெறுகிறதா என்று தொடர்ச்சியான முறையில் கண்காணிக்கும் பொருட்டு, காவல் துறை மற்றும் சென்னைக் குடிநீர் அதிகாரிகளைக் கொண்ட 36 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப் பெற்று, அவை தினசரி நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குடிநீர் விநியோகத்தைக் கண்காணித்து வருகின்றன.

மக்களின் இன்னல்களை களையும் எண்ணத்துடன் செயலாக்கப் பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் ஒவ்வொரு வாரமும் சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் விரிவாக ஆய்வு செய்து, தேவையான ஆணைகளை உடனுக்குடன் வழங்கு கிறார்கள்.

**5. செயற்கை மழை:**

சென்னை நகரில் பொழியக் கூடிய மழையின் அளவை நவீன தொழிற் நுட்பத்தினைப் பயன்படுத்தி ஓரளவு அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன், இத்தொழில் நுட்பத்தினை உலகின் பல்வேறு நாடுகளிலும் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படுத்தி வரும் அமெரிக்க நிறுவனம் (M/s. Atmospheries Inc., U.S.A.) ஒன்றின் உதவியுடன் மழை மேகங்களை செயற்கை முறையில் குளிர்வித்து கூடுதல் மழை விளைவிக்கும் திட்டத்தை கடந்த ஒரு மாதமாக செயலாக்கி வருகிறோம். இதனால், இயற்கையில் பொழியக்கூடிய மழையளவை சுமார் 15 சதவிகிதம் அதிகப்படுத்த சாத்தியக் கூறுகள் உள்ளன என்று தொழில் வல்லுனர்கள் கூறியுள்ளனர்.

தற்போது வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளது. இதனால், பொழியக்கூடிய கூடுதல் மழையளவைப் பொருத்து, டிசம்பர் மாத இறுதிவாக்கில், சென்னை மக்களுக்கு தினசரி குழாய்மூலம் நீர் வழங்குவது குறித்து அரசு முடிவெடுக்கும்.

[திரு டி. எம். செல்வகணபதி] [1993 அக்டோபர் 29

அரசு மேற்கண்ட பணிகளின் செயல்பாட்டினை உன்னிப்பாக கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன். நீங்கள் ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலும் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இது, இன்று காலையில் திரு. செல்லக்குமார் அவர்களும், திரு. ரங்கநாதன் அவர்களும் வந்து, நாங்களும் கேட்கிறோம் என்று சொன்னார்கள். விதிமுறைகளின்படி அதற்கு இடமில்லை. அதில் அக்கறை காட்டுகிறார்கள் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை கொடுத்த பிறகும் இன்னும் விபரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார் என்று அமைச்சரைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். நன்றி, இருந்தாலும் இங்கே சென்னையிலே இப்போது குடிநீர் இல்லாமல் மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும், பொதுவாக தினந்தோறும் குழாய்களில் நீர் வருமா என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் சுத்திகரிக்கப்பட்ட நீர் கிடைக்குமா என்றால், ஓட்டல்களில் கொடுக்கும் டீ கலரில் தான் தண்ணீர் கிடைக்கிறது. அமைச்சர் அளித்துள்ள அறிக்கையில், 3 பக்கத்திற்கு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முதல் கட்டமாக ரூ. 23.22 கோடியும், இரண்டாவது கட்டமாக ரூ. 29.50 கோடியும் ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு செயற்கை மழை எல்லாம் பெய்ய வைக்கிற நேரத்தில் தினந்தோறும் இந்த சென்னை நகர மக்களுக்கு தண்ணீர் கிடைக்கிற அளவுக்கு நீரை வழங்க அமைச்சர் அவர்கள் உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12.50

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஞானசேகரன் சொன்னார்கள். அவர்கள் எழுப்புகின்றார் என்று சொன்னாலே, மேலும் பல விவரங்களைச் சேகரிக்கின்ற நிலையில், அரசு அந்த அளவுக்கு துரிதமாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை அந்த அளவுக்கு கடுமையான ஒரு பிரச்சினையாக, சங்கடத்திற்கு உரிய பிரச்சினையாக கடந்த சனவரி மாதத்திலிருந்து வறட்சியின் காரணமாக இந்த நிலைமை இருந்து வந்தது நம் அத்தனை பேருக்கும் தெரியும். இன்றைக்கு சென்னை மாநகரைப் பொறுத்தவரை சுமார் 60 லட்சம் மக்களுக்கு மேலாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வசிக்கின்ற மாநகரம் இந்த மாநகரம். இந்த மாநகரத்திற்கு குடிநீர் என்று சொல்கின்றபோது இன்றைக்கு ரெட்-ஹில்ஸ், பூண்டி, புழல் ஏரி போன்ற ஏரிகளிலிருந்து வருகின்ற தண்ணீர் வரத்தை நம்பித்தான் சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நிலையில் சென்னைப் பெரு நகர் குடிநீர் வடிகால் வாரியம் இருந்து வருகின்றது. அந்த அடிப்படையில், பருவ மழை பொய்த்ததன் காரணத்தாலும், கடந்த ஆண்டு பெய்ய வேண்டிய பருவ மழை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் முழு விவரமும் வைத்து இருக்கிறீர்கள். உறுப்பினர் அவர்கள் நாள்தோறும் கொடுக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதைத்தான் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு சென்னை மாநகரைப் பொறுத்தவரை 10,389 தெருக்கள் இருக்கின்றன. கடந்த சனவரி மாதத்திலிருந்து குழாய்களில் தண்ணீர் வரத்தே இல்லை என்ற நிலைமை உருவாகி இருக்கின்றது. ஏன் குறிப்பிட்டுச் சொல்கின்றேன் என்று சொன்னால், ஏரிகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் வரத்து இல்லாத காரணத்தினால், மழை பொய்த்ததின் காரணத்தினால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாத நிலைமை, வறண்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதையெல்லாம் சரிக்கட்டுகின்ற வகையிலேதான், இத்தனை தெருக்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே இன்றைக்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுத்து கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய்க்கு மேலாக தினந்தோறும் நகர மக்களுக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக லாரிகள் மூலமாகவும், டிராக்டர்கள் மூலமாகவும், தண்ணீரை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சென்னை நகர மக்களே இதை நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். இவ்வளவு கடுமையான பிரச்சினைகள் இருந்தும், அரசு இன்றைக்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு, சனவரி மாதத்திலிருந்து கிட்டத்தட்ட 120 லாரிகள் அனுப்பி இருக்கிறது; இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் நொடிக்கு நொடி, மணிக்கு மணி, நாளுக்கு நாள் அந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டு இருக்கிறார்கள்; (மணி அடிக்கப்பெற்றது) நேரடியாக ஆய்வு செய்து ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்த்து வைத்து இருக்கிறார்கள். அன்றைக்கு 120 லாரியாக இருந்தது, இன்றைக்கு 370 லாரியாக உயர்த்தப் பட்டு இருக்கிறது. ஒரு லாரியில் தினமும் 10 டிரிப்புகளுக்கு மேலாக தண்ணீரை ஒவ்வொரு தெருக்களுக்கும் வழங்கிக் கொண்டு இருக்கிறோம். அதேபோல் டிராக்டர்களை வாடகைக்கு அமர்த்தி கிட்டத்தட்ட 3,560 டிரிப்புகள் இன்றைக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு ஹேண்ட் பம்புகளின்

எண்ணிக்கையை இன்கிரீஸ் செய்து இருக்கிறோம். (மணி அடிக்கப்பெற்றது). அதை அதிகமாகக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு தினந்தோறும் தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த பருவ மழையிலே இந்தப் பிரச்சினை நிச்சயமாக ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்கின்ற போது, தீரும் என்று கருதுகிறேன்.

(ஆஆ) ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற போது இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த, கவன ஈர்ப்பு. திரு. ஆர். கோடிமாரி அவர்கள் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஒரு மாத காலத்தில் நாகை ஜெகதாப்பட்டினத்தில் இருந்து நமது கடல் எல்லைக்குள் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக்கொன்றது சம்பந்தமாக ஏற்பட்ட பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

கடந்த 1—9—1993 அன்று நாகை-காயிதே மில்லத் மாவட்டம், ஆற்காட்டுத் துறையைச் சேர்ந்த மீனவர்கள் T.J.C. 883 என்ற எண்ணுள்ள படகில் கோடிக்கரை அருகே மீன் பிடிக்கும் போது, திரு. சுப்ரமணியம், த/பெ. ஆறுமுகம் என்ற மீனவர் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறந்தார். அப்படகில் சென்ற மற்ற மீனவர்களான திருவாளர்கள் பழனிச்சாமி, சிதம்பரம், ராஜமாணிக்கம் என்ற மீனவர்கள் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்கள். கரைக்கு திரும்பி விட்டார்கள். அதே படகில் சென்ற திரு. தொண்டிச் செட்டியார் த/பெ. காத்தமுத்து என்ற மீனவர் படகோடு கடலில் மூழ்கி விட்டார்.